DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.262/2025

PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | உமாமகேஸ்வரி (Lw - 8) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 19.05.2026**

நான் தற்போது திருச்செங்கோடு வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் மோட்டர் வாகன ஆய்வாளர் நிலை 1ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.10.2024ந் தேதி நான் நாமக்கல் தெற்கு வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் பணியிலிருந்த போது எருமப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.174/2024 சட்டப்பிரிவு 281, 125(a) BNS வழக்கில் சம்மந்தப்பட்ட TN 64 L 5942 பதிவெண் கொண்ட இருசக்கர புல்லட் வாகனம் மற்றும் 05.11.2024ல் TN 88 A 2221 என்ற TVS XL இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்கும்படி உதவி ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்துடன் மேற்சொன்ன வாகனங்களை ஆய்விற்காக ஆஜர் படுத்தினார்.

TN 64 L 5942 வாகனத்தை எனது அலுவலகத்தின் முன்பு வைத்து ஆய்வு செய்தேன். வாகனத்திற்கு கீழ்கண்ட சேதாரங்கள் ஏற்பட்டிருந்தது. வலதுபுற இண்டிகேட்டர் உடைந்திருந்தது. முன்புற முகப்பு விளக்கு முழுவதும் உடைந்திருந்தது. முன்புற பதிவு எண் பலகை வளைந்திருந்தது. வாகனத்தின் காப்பீட்டு சான்று

ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. கால் தடை திறன் திருப்திகரமாக இருந்தது. இந்த விபத்தானது எந்த விதமான இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **(** TN 64 L 5942 வாகனத்திற்கான மோ**.**வா**.**அறிக்கை அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

இதே வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 88 A 2221 என்ற TVS XL இருசக்கர வாகனத்தை எனது அலுவலகத்தின் முன்பு வைத்து ஆய்வு செய்தேன். வாகனத்திற்கு கீழ்கண்ட சேதாரங்கள் ஏற்பட்டிருந்தது. வாகனத்தில் எவ்வித சேதாரமும் காணப்படவில்லை. வாகனத்தின் காப்பீட்டு சான்று ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. கால் தடை திறன் திருப்திகரமாக இருந்தது. இந்த விபத்தானது எந்த விதமான இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **(TN 88 A 2221** என்ற **TVS XL** இருசக்கர வாகனத்திற்கான மோ**.**வா**.**அறிக்கை அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்துக்குள்ளான வாகனங்களை வேறு வேறு தேதியில்தான் ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். போலிசார் கொடுத்த வேண்டுகோளின் பேரில்தான் விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தேன் என்றாலும் சம்பவ இடம் சென்று வாகனங்களை ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**